**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**O.S. 60/2022**

**வா.சா.4**

**முத்து, த/பெ. நாகரெத்தினம்**

**முதல் விசாரணை தொடர்ச்சி** :

**(கடந்த 2022-2023 ம் ஆண்டிற்கான பசலி 1432 ற்கான தாவா சொத்து புல எண். 165/5 ஐ பொறுத்து வாதி ராமச்சந்திரன் என்பவர் சாகுபடி செய்து வருவதாக சான்று அளித்துள்ளேன். மேற்படி அடங்கல் கணக்கு (அசலுடன் ஒப்பிடப்பட்டது) வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கிராம கணக்கு பதிவேட்டில் தாவா சொத்தானது ராமச்சந்திரனுக்கு சொந்தமானது என்று தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சான்றானது கிராம விசாரணை செய்து அதனடிப்படையில் ராமச்சந்திரன் மகன் வெங்கடேசன் சாகுபடி செய்து வருகிறார் என்று தான் வழங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை** :

மேற்படி வா.சா-ஆ.5 ஆவணத்தில் வெங்கடேசன் சாகுபடி செய்து வருவதாக சொல்லியுள்ளது என்ன குறிப்பிட்ட பயிர் சாகுபடி செய்து வருவதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி சான்றானது விவசாய கடனுக்காக கொடுத்தது என்றால் சரிதான். நான் 2022 ம் ஆண்டு முதல் திருக்காரவாசல் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி வாதி, பிரதிவாதிகளுக்கு இடையே கடந்த 07.10.2022 ம் தேதி பிரச்சனை ஏற்பட்டது சம்மந்தமாக எனக்கு தெரியுமா என்றால் அது பற்றிய விபரம் எனது கவனத்திற்கு கொண்டு

வரப்படவில்லை. 2022 ம் ஆண்டு முதல் யார் சாகுபடி செய்து வருகிறார் என்றால் ராமன் என்பவர் தான் சாகுபடி செய்து வருகிறார். **(கடந்த 1432 ம் பசலிக்கு தாவா புல எண்ணில் ராமன் என்பவர் சம்பா சாகுபடி செய்துள்ளார் என்று சான்று வழங்கியுள்ளேன். மேற்படி அடங்கல் கணக்கு என்னால் வழங்கப்பட்டது. அது சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 1433 ம் பசலிக்கு ராமன் என்பவர் தாவா சொத்தில் குறுவை சாகுபடி செய்துள்ளார் என்று சான்று வழங்கியுள்ளேன். மேற்படி அடங்கல் கணக்கு என்னால் வழங்கப்பட்டது. அது சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 01.02.2023 ம் தேதியிட்டு 1432 ம் பசலிக்கு ராமன் பெயரில் நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்ய என்னால் வழங்கப்பட்ட சான்று சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 02.02.2023 ம் தேதியிட்டு 1432 ம் பசலிக்கு ராமன் பெயரில் பயிர் காப்பீடு செய்ய என்னால் வழங்கப்பட்ட சான்று சா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 01.02.2024 ம் தேதியிட்ட ராமன் பெயரில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்ய என்னால் வழங்கப்பட்ட சான்று சா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** வாதி சாகுபடி செய்வதை பிரதிவாதி தடுக்கிறார் என்று சொல்லி அவருக்கு எந்தவிதமான சான்றும் வழங்க கூடாது என்று என்னிடம் மனு அளித்தாரா என்றால் இல்லை. வாதியும், வாதியின் குடும்பத்தாருக்கும் தாவா சொத்து உள்ள கிராமத்தில் வசிக்கவில்லை என்றால் சரிதான். வாதியின் பணியாட்கள் என்று சொல்லி யாரேனும் ஆவணங்கள் கேட்டு மனு தாக்கல் செய்தார்களா என்றால் இல்லை.

**அனுமதியின் பேரில் மறு விசாரணை :**

எங்களது கிராம கணக்கின்படி புல எண். 165/5 ல் ராமச்சந்திரன் தான் உரிமையாளர் என்றால் சரிதான். மேற்படி 53 ஏர்ஸ் என்பது எத்தனை செண்ட் என்றால் தெரியாது. ராமச்சந்திரன் தவிர ராமனுக்கு 165/5 ல் ஏதேனும் சொந்தமான விஸ்தீரணம் நிலம் உள்ளதா என்றால் அது பற்றி தெரிந்து கொள்ளவில்லை. மேற்படி கிராம அடங்கல் கணக்கில் காலம் நம்பர் 7 ல் நிலத்தின் எந்த பகுதியாவது சாகுபடியாளரால் பயிரிடப்பட்டுள்ளதா என்ற இடத்தில் தாவா புல எண்ணில் பிரதிவாதியால் சாகுபடி செய்து வரப்படுவதாக ஏதேனும் குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு குறிப்பு இருக்கும் பட்சத்தில் தான் சான்று வழங்க இயலும் என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் டைரி பராமரிக்கும் பழக்கம் இல்லை என்றால் சரிதான். ராமனுக்கு சான்று வழங்கியதில் இடத்தை நேரடியாக பார்வையிட்டீர்களா என்றால் ஆமாம். ராஜசேகர் என்பவருடன் சென்றேன். ராஜசேகர் கிராம பணியாளர் இல்லை. கிராம உதவியாளர் பணியிடம் காலியாக உள்ளது. ராமனுக்கு ஏதேனும் சான்று வாங்கினீர்களா என்றால் ராமச்சந்திரன் என்னிடம் முதலில் நகைக்கடன் சான்று கேட்டார். அதன்படி அவர் பெயருக்கு சாகுபடி சான்று வழங்கினேன். மேலும், பிரதிவாதி ராமன் தனது சொந்த உபயோகத்திற்கு கேட்டதால் அவரது பெயருக்கு சான்று வழங்கினேன். மேற்படி ராமன் நெல் கொள்முதலுக்கோ அல்லது பயிர் கடனுக்கோ என்று குறிப்பிடாமல் கேட்டதால் சான்று இல்லாமல் அடங்கல் கணக்கில் உண்மை நகலில் சான்று செய்து கொடுத்தேன். ஸ்தலத்தில் ராஜசேகருடன் சென்று பார்த்து தான் ராமன் சாகுபடி

செய்து வந்ததாக பார்த்து வந்தேன். கிராம அடங்கல் கணக்கில் தாவா புல எண்ணில் 13 வது காலத்தில் 1/1 என்று குறிப்பிட்டுள்ளதற்கு விளக்கம் என்னவென்றால், எந்த மாதம் பயிர் தெளித்தது / எந்த மாதம் அறுவடை என்பதை தான் குறிப்பிட்டுள்ளேன். அந்த 1வது மாதமே பயிரிடப்பட்டு, அந்த மாதமே பயிர் அழுகி விட்டதால் 1/1 என்று குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு இருக்கும்பட்சத்தில், சா.சா.ஆ.4 ஆவணத்தில் 02.02.2023 ம் தேதியன்று பிரதிவாதி சாகுபடி செய்வதாக எவ்வாறு சான்று வழங்கியுள்ளேன் என்றால் 1வது மாதத்திலே சென்று பார்த்ததை வைத்து 02.02.2023 அன்று சான்று வழங்கினேன். ராமன் நேரடியாக என்னிடம் தாவா நிலங்களை சாகுபடி செய்வதாக சொல்லவில்லை. சாட்சி தற்சமயம் ராமன் தன்னிடம் தாவா நிலங்களை சாகுபடி செய்வதாகவும், சான்று வழங்கும்படியும் கேட்டார் என்றும் மாற்றி சொல்கிறார். ராமன் எந்த தேதியில் சான்று கேட்டார் என்றால் நியாபகம் இல்லை. எப்பொழுது சென்று ஸ்தல ஆய்வு செய்தேன் என்றால் தேதி நியாபகம் இல்லை. மேற்படி சான்றுகள் நேரடி நெல் கொள்முதலுக்காக ராமன் பெயருக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி பெயரில் தாவா கிராமத்தில் நிறைய நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். அதன் காரணமாக ராமன் பொதுவாக கேட்டதன் பேரில் தாவா புல எண்ணிற்கு எந்த விசாரணையும் செய்யாமல் ராமன் பெயருக்கு சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி சான்றுகளில் ஆவணத்தை பார்வையிட்ட வகையில், ராமன் தான் சாகுபடி செய்கிறார் என்று தெரிய வருவதால் இந்த சான்று வழங்கப்படுகிறது என்று ஏதேனும் குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.5 வரையிலான சான்றுகள் அனைத்தும்

எந்தவித விசாரணையும் மேற்கொள்ளப்படாமல் அதிகாரத்தை பயன்படுத்தி பிரதிவாதிக்கு ஆதரவாக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சான்றுகள் அனைத்தும் சட்டப்படியான நடைமுறையை பின்பற்றாமல் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ராமன் கேட்டுக் கொண்டதற்காக சான்றுகள் வழங்கிவிட்டு வா.சா.ஆ.5 ஆவணத்திற்கு மாறாக தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம் /- S. விஜய் ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.